**IN THE COURT OF THE SUB JUDGE, DENKANIKOTTAI**

**MCOP.No. 6 /2024**

Deposition of witness for **PW1** for Petitioner and solemnly affirmed and oath for sworn taken file by Tr. R.Sankar, Gr.II Bench Clerk in accordance with the provisions of Act 1975.

| | | | |
|---|---|---|---|
| Name | : Jayamma | Husband Name | : |
| Village | : | Taluk | : Denkanikottai |
| | | Age | : |

**நாள்:13.11.2024.**

**மனுதாரர் முதல் விசாரணை :**

சத்தியமாக சொல்கிறேன். நான் இந்த வழக்கில் 1 மனுதாரர், ம.சா.1 ஆக இருந்து எனது முதன்மை சாட்சிய பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். அதனை சாட்சியமாக ஏற்க வேண்டுகிறேன். அசல் மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை சான்றாவணங்களாக பெற வேண்டுகிறேன்.

குற்ற எண்.320/2016 முதல் தகவல் அறிக்கை ஜெராக்ஸ் நகல் **Ex.P1** ஆகவும், தேன்கனிக்கோட்டை அரசு மருத்துவமனையில் வழங்கிய விபத்து சான்று ஜெராக்ஸ் நகல் **Ex.P2.** ஆகவும்

தர்மபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் வழங்கிய டிஸ்சார்ஜ் சம்மரி அசல் **Ex.P.3** ஆகவும்,

**KA.40/2502** டெம்போ டிராவல் வாகனத்தின் காப்பீட்டு சான்று ஜெராக்ஸ் நகல் **Ex.P.4** ஆகவும்,

டெம்போ டிராவலர் வாகன ஆய்வாளரின் ஆய்வறிக்கை ஜெராக்ஸ் நகல் **Ex.P.5** ஆகவும்,

Medical Bills Original **Ex.P.6** ஆகவும், (Strongly Objection for Respondent)

ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு விபத்தில் தலையின் வலதுபுரம், கையில் அடிப்பட்டது அதில் எனது தலையில் வலதுபுரம் 5 தையல்கள் போடப்பட்டு டிஸ்பிகரேசன் ஆகியுள்ளது.

எனக்கு வலது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது.

நான் அரசு மருத்துவமனையில் தான் சிகிச்சை பெற்று கொண்டேன்.

நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்கள் வழக்கிற்காக போலியான பில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

நான் டெம்போடிராவலில் சென்ற போது தான் விபத்து நடந்தது.

விபத்தில் வேறு எந்த வாகனமும் சம்பந்தப்படவில்லை என்று சொன்னாலும் நாங்கள் சென்ற வண்டி ஓட்டுநர் வேகமாக சென்றதால் அவரின் கட்டுப்பாடை இழந்து வண்டி கவந்துவிட்டது என்று சொன்னால் சரிதான் ஆனால் அவர் வேகமாக செல்லவில்லை.

இந்த விபத்தில் என்னை தவிர 14 பேருக்கு விபத்து ஏறபட்டது அவர்களும் மனு போட்டு இழப்பீடு பெற்று கொய்டார்கள்.

நான் கூறுகிறேன் உங்களுக்கு நீங்கள் சொன்ன அளவில் நிரந்தர ஊனம் ஏற்படவில்லை என்று சொன்னாலும் வருமான இழப்பு மற்றும் செயல் திறன் இழப்பு ஏற்படவில்லை என்று சொன்னாலும் நீங்கள் இழப்பீடு பெற வேண்டி நீங்கள் மிகைப்படுத்தி கூறுகிறீர் என்று சொன்னாலும் சரியல்ல.

வாகனத்திற்கு பர்மிட் இல்லை என்பதாலும் அது கமர்சியல் வெய்கிள் என்பதாலும் பாலிசி விதிமீறல்கள் ஏற்பட்டுள்ளதாலும் நீங்கள் கேட்கும் தொகை நாங்கள் தர வேண்டியது இல்லை என்று சொன்னாலும் நீங்கள் முதல் பிரதிவாதியிடம் தான் அதை கோர முடியும் என்று சொன்னாலும் சரியல்ல.

2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது மறுவிசாரணை இல்லை.**

**ஒம்./—திரு.ஆர்.ஹரிஹரன்.,எம்.எல்.,**
**சார்பு நீதிபதி,**
**தேன்கனிக்கோட்டை.**